ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2298/48 - 2022 සැප්තැම්බර් මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.09.22
*2298/48 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*
(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண மாகாண சபை

### ஊவா மாகாண கௌரவ ஆளுநரின் அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் 154 (இ) பிரிவில் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்கள், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மை வாய்ந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவுக்கு முரணாக ஊவா மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தை கண்காணிப்பதற்கான தத்துவங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, அதனுடன் தொடர்புடைய விளைவாந்தன்மை வாய்ந்த விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகளை வழங்குவதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊவா மாகாண சபையின், 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நியதிச்சட்டம் என அடையாளம் காணப்படும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தை கண்காணிக்கும் தத்துவம் தொடர்பான 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதியச்சட்டத்தின் 2(3)(அ)(III) ஆம் பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம், ஊவா மாகாணத்தின் ஆளுநரான ஏ. ஜே. எம். முஸம்மில் ஆகிய நான், கதிர்காமம் பிரதேச சபையின் செயற்பாடுகளை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2279/10, 2022.05.09 ஆந் திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அன்றைய தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டேன்.

1A - PG 5978 — 08 (2022/09)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2279/10, 2022.05.09 ஆந் திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அந்நியதிச் சட்டத்தின் 2 (1) என்ற உப பிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (உ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விடயம் கதிர்காமம் பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் உள்ளிட்ட சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக விசாரணை செய்து எனக்கு அறிவிப்பதற்காக நீதிமன்ற அதிகாரி, ஓய்வுபெற்ற நீதிமன்ற நீதிவான் எச். எம். ஆர். அனுர குமார அவர்கள் நியமிக்கப்பட்டார்.

ஓய்வுபெற்ற நீதிமன்ற நீதிவான் அவர்களின் சம்பந்தப்பட்ட விசாரணை அறிக்கையின் விடயங்கள் தொடர்பாக நான் தனிப்பட்ட முறையில் வாசித்து திருப்தியடைந்ததுடன், 2022.09.22 நள்ளிரவு முதல் கதிர்காமம் பிரதேச சபையை கலைப்பதற்கு தீர்மானித்ததாக இங்ஙனம் அறிவிக்கின்றேன்.

அதேவேளை மேற்குறிப்பிட்ட நியதிச்சட்டத்தின் 5 ஆவது பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2022.09.22 ஆந் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் புதிய பிரதேச சபையொன்று தாபிக்கப்படும் வரை அல்லது மீண்டும் ஆணையொன்று வெளியிடப்படும் வரை ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தின் கதிர்காமம் பிரதேச சபையின் தத்துவங்களை செயற்படுத்துவதற்கு, பணிகளை மேற்கொள்வதற்கு மொனராகலை உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு இங்ஙனம் கட்டளையிடுகிறேன்.

**ஏ. ஜே. எம். முஸம்மில்,**
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம்,
2022, செத்தெம்பர் 21.

EOG 09 -0241

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.